சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – 2020–2021 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை– மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களின் புதிய அறிவிப்புகள் – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கிய மேம்பாட்டுச் சங்கம் மூலம் சிறந்த எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகையினை ரூ.40,000/–லிருந்து ரூ.50,000/– –ஆக உயர்த்தி வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன .

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (சிஉதி) துறை

அரசாணை (நிலை) எண்.88

நாள் : 28.08.2020

சார்வரி வருடம் ஆவணி 12,
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்கப்பட்டது:-

1. அரசாணை (நிலை) எண்.58, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள். 04.04.2003.
2. அரசாணை (நிலை) எண். 81, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந5)துறை, நாள் 10.7.2006.
3. அரசாணை (நிலை) எண்.68, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்.27.06.2012.
4. ஆதி திராவிடர் நல ஆணையர் அவர்களின் கடித ந.க.எண். வி1/3829/2020, நாள் 19.04.2020

------

ஆணை:-

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 2020-2021 ஆம் ஆண்டிற்கான துறை மானியக் கோரிக்கையின் போது ஏனைய பிற அறிவிப்புகளுடன் கீழ்க்கண்ட அறிவிப்பினையும் வெளியிட்டிருந்தார்கள் :–

> "ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் எழுத்தாளர்களுக்கு அளிக்கப்படும் நிதி உதவி ரூ.40,000/– இந்நிதியாண்டிலிருந்து ரூ.50,000/– ஆக உயர்த்தி வழங்கப்படும்."

2. மேலே ஒன்று முதல் மூன்று வரை படிக்கப்பட்ட அரசாணைகளின் அடிப்படையில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கிய மேம்பாட்டுப் பணி அமைப்பு நிதி (Corpus

Fund) மூலம் கிடைக்கும் வட்டித்தொகையிலிருந்து, 10 ஆதி திராவிடர்/ பழங்குடியினர் /மதம் மாறிய கிறித்துவ ஆதி திராவிடர் மற்றும் ஆதி திராவிடர் அல்லாத இனத்தைச் சேர்ந்த ஒரு எழுத்தாளர் உள்ளிட்ட 11 எழுத்தாளர்களின் சிறந்த இலக்கிய படைப்பினை தெரிவு செய்து, அவர்களை ஊக்குவிக்கும் வண்ணம் தலா ரூ.40,000/– அல்லது நூல் வெளியிட ஆகும் செலவு இவற்றில் எது குறைவோ அத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

3. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட ஆதி திராவிடர் நல ஆணையரின் கடிதத்தில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கிய மேம்பாட்டுச் சங்க நிதி (Corpus Fund) தொகைக்கு ஆண்டுதோறும் வட்டித்தொகையாக ரூ.7,72,137/– வரை பெறப்படுகிறது என்றும், இத்தொகையிலிருந்து சிறந்த எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு, வெகுமதியாக தலா ரூ.40,000/- வழங்கப்பட்டு வருகின்றது என்றும், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் புதிய அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு 2020-2021-ஆம் நிதியாண்டிலிருந்து, சிறந்த எழுத்தாளர்களுக்கு அளிக்கப்படும் நிதி உதவியினை ரூ.40,000/- லிருந்து ரூ.50,000/- ஆக உயர்த்தி வழங்கலாம் என்று தெரிவித்து, இது குறித்து உரிய ஆணைப் பிறப்பிக்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

4. மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்துவது தொடர்பான, ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துரு கவனமாக பரிசீலிக்கப்பட்டது. அதனடிப்படையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கிய மேம்பாட்டு சங்க வைப்பு நிதிக்கு கிடைக்கப்பெறும் வட்டித் தொகையிலிருந்து, ஆதி திராவிடர் / பழங்குடியினர் /மதம் மாறிய ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களின் சிறந்த இலக்கிய படைப்புகள் மற்றும் ஆதி திராவிடர்கள் பற்றிய, பிற இனத்தைச் சேர்ந்த ஒரு எழுத்தாளரின் சிறந்த இலக்கிய படைப்புக்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும் நிதியுதவி ரூ.40,000/– ஆனது 2020–2021 ஆம் நிதியாண்டிலிருந்து ரூ.50,000/– ஆக உயர்த்தி அரசு ஆணையிடுகிறது.

5. மேலும் பத்தி 4-இல் குறிப்படப்பட்டுள்ள தொகை அல்லது தெரிவு செய்யப்பட்ட நூல்களை வெளியிட ஆகும் செலவு இவற்றில் எது குறைவோ அத்தொகை எழுத்தாளர்களுக்கு நிதியுதவியாக வழங்கப்படும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 27080/நிதி(ஆதி(ம)பந)/ 2020, நாள் 21.08.2020–இல் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

சோ. மதுமதி,
அரசுச் செயலாளர் (மு.கூ.பொ)

பெறுநர் :

கூடுதல் தலைமைச் செயலாளர்,
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை/
தலைவர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கிய
மேம்பாட்டுச் சங்கம், சென்னை–9

ஆணையர், ஆதிதிராவிடர் நலம்/
உறுப்பினர் செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்
கலை இலக்கிய மேம்பாட்டுச் சங்கம், சென்னை–5
இயக்குநர், பழங்குடியினர் நலம்/உறுப்பினர்
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கிய
மேம்பாட்டுச் சங்கம், சென்னை–5
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை– 18
இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை, தமிழ் வளர்ச்சி வளாகம்,
முதல் தளம், ஹால்ஸ் சாலை, எழும்பூர், சென்னை–8
முனைவர் கா.மு.பாபுஜி, தமிழ்த்துறை தலைவர், இராமகிருஷ்ணமிஷன்,
விவேகானந்தா கல்லூரி, மயிலாப்பூர், சென்னை–04.
முனைவர் து. சானகி, அயல் நாட்டுத் தமிழர் புலம்,
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை – 113.

<u>நகல்:–</u>

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
அமைச்சரின்சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
நிதித்துறை சென்னை–9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(அநமு1) துறை,
சென்னை–9
இருப்பு கோப்பு/உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.